உ

கணபதிதுணை.

குருநமச்சிவாயசுவாமிகள்

அருளிச்செய்த

சிதம்பரவெண்பா.

இஃது,

சென்னபட்டணம்

ஊ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரது

கலாரத்நாகரம் என்னும்

தமது அச்சுக்கூடத்திற் பதிப்பித்து

பிரசுரிக்கப்பட்டது.

1896

சிவமயம்

சிதம்பரவெண்பா.

காப்பு.

மன்னுஞ்சிதம்பரதேவாவென்றுவெண்பாவிற்
பன்னுந்தமிழ்மாலைபாடவே - யுன்னுங்
கருத்தக்கணமுதவக்கண்பார்த்தருள்வாய்
திருத்தக்கணபதியேநீ.

முத்திக்குமூலமொழியிலுனையடைந்தோர்
பத்தித்தவத்தோர்பரிவன்றோ - தித்திக்கும்
பாகாமொழியுமையாள்பாகாபணியணிந்த
வாகாசிதம்பரதேவா. (க)

தூக்கியபொற்றாளிற்சுவைகாட்டித்தொல்வினையை
நீக்கியெனையாளநினைகண்டாய் - பாக்கியமு
மின்னார்சிவலோகவீடுந்தரும்புலியூர்
மன்னுசிதம்பரதேவா. (உ)

அருவுருவமாகியொளியாகிநீயார்க்குங்
கருவுருவமாகியகண்காணத் - திருவுருவ
மாயம்பலத்தினடமாடுந்திறமிதென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (௩)

பிடேந்திநின்னடியைப்பேணுவாருண்டுடுத்து
நாடேந்திவாழ்வதற்குநாணமே - லோடேந்தி
நேயம்பெறத்துணிந்துநீசென்றிரப்பதென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (௪)

நாவிருக்கப்பாவிருக்கநல்லதிருநீறிருக்கப்
பூவிருக்கவெங்கும்புனலிருக்கச் - சேவிருக்க
நீயம்பலத்திருக்கநெஞ்சொருமியாததென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (ரு)

துளைத்தமணிமுத்திலகுதுய்யபணிபூட்டி
யுளத்தினிமையானவெல்லாமூட்டி - வளர்த்தெடுத்த
காயங்கிடக்கவுயிர்காணமற்போனதென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (சா)

தழைத்திடுசீராளன்றனைக்கறிகளாக்கி
விழைத்தலினாலேபடைத்துமீள - வழைத்தளவே
காயங்கொடுநடந்துகண்காணவந்ததென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (எ)

மாறுபடுமாடகனைவல்லுகிராற்கிழித்துக்
கூறுபடக்கொன்றுகடுங்கோபமாய் - வீறுபடுஞ்
சீயந்தனையடக்கச்சிம்புள்வடிவானதென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (அ)

பங்கயழின்சேரும்பகீரதனென்பான்புரியுந்
துங்கமிகுநற்றவத்தாற்றோன்றவே - கங்கைநதி
தோயுஞ்சடைக்கேசுவறக்கரந்ததென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (சுூ)

தன்றகப்பனென்றுமொருதன்மையுமிலாமறையோ
னென்றுசற்றுநெஞ்சத்திலெண்ணமற்-கொன்றவற்கு
நீயங்கவற்குரியநீடுதந்தையானதென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (க0)

சாதற்பிறவிதனிலிளைத்தநாயேற்குன்
பாதமலர்வீடுபாலிப்பாய் - நாத
முடிவேயழியாமுழுமுதலேமுத்தி
வடிவேசிதம்பரதேவா. (கக)

எப்போதுநாயடியேனிந்தவுடல்போடுவே
னப்போதுமுன்னின்றருளுவாய் - முப்போதும்
பொன்னுடர்வந்திறைஞ்சிப்போற்றுங்கனகசபை
மன்னுசிதம்பரதேவா. (கஉ)

மோகக்கடல்கடந்துமுத்திக்கரைகாண்கைக்
கேகப்புணைபெறுவதெந்நா - ளாகப்
பணியேயணியும்பரஞ்சுடரேகண்ணின்
மணியேசிதம்பரதேவா. (கங)

தானவருமாலுஞ்சதுமுகனுமற்றுமுள்ள
வானவருந்தேடிமயங்கவே - ஞானமுட
னேயம்பெறுமடியார்நெஞ்சினுள்ளேநிற்பதென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (கச)

குலங்கடந்துமுன்னைக்குணங்கடந்துபொல்லாச்
சலங்கடந்துதர்க்கங்கடந்து - மலங்கடந்து
நின்றார்கருத்திலுறைநித்தனேநீள்கனக
மன்றுசிதம்பரதேவா. (கரு)

அங்கப்பிலுக்குவிலையங்கனையாரல்குன்மலப்
பங்கத்தழுந்துவதோபாவியேன் - சங்கக்
குழையாய்பழையாய்குளிர்கருணைவெள்ள
மழையாய்சிதம்பரதேவா. (கசு)

இன்றுன்பதங்கண்டேனீடேறினேன்பிறந்தே
பொன்றுந்துயரனைத்தும்போக்கினே - னென்றுந்
திரனேயரனேதெரிசனமுத்தி
வரனேசிதம்பரதேவா. (கஎ)

வஞ்சத்தமியேனின்வாய்த்தமலர்ச்சேவடிக்கே
நெஞ்சிற்கனிவாய்நினைந்திடேன் - பஞ்சக்
கரனேயரனேகருதரியமுத்தி
வரனேசிதம்பரதேவா. (கஅ)

பச்சிலைக்குநேரானபங்கயக்கண்மாலறியா
நிச்சயத்தைப்பாலிக்குநேசமா - மிச்சை
தருவாயுனைவணங்கச்சங்கரியோடிங்கே
வருவாய்சிதம்பரதேவா. (கக)

வென்னிட்டுத்தோற்றபடைவெல்லுமேயேதுமுனை
முன்னிட்டுக்கொண்டான்முடியுமே - நின்னிட்ட
மல்லாரறிவதனுக்கப்புறத்தேநின்றுவிட
வல்லாய்சிதம்பரதேவா. (உ0)

பேரிளமையின்பம்பிணிமூப்புச்சாக்காடென்
றூறினையுமாற்றியெனையாளுவா - யீறுமுத
லில்லாப்பொருளினுமுண்டில்லையுமாய்நின்றுவிட
வல்லாய்சிதம்பரதேவா. (உக)

வன்புசெயுமறலிவந்தழைத்தபோதறமு
மன்புமுயிர்த்துணையேயல்லாம - லின்பந்
தருமோகமாதுந்தமனியமுங்கூட
வருமோசிதம்பரதேவா. (உஉ)

ஆரணமும்போற்றியளவிட்டறியாத
பூரணமெய்ஞ்ஞானநெறிபோதிப்பாய் - நாரணனுங்
காணுமலரடியைக்காட்டுங்கனகசபை
வாணுசிதம்பரதேவா. (உ௩)

பொய்யென்றுசொல்லாமற்பொல்லாப்புலாலுடம்பை
மெய்யென்றுபேரிட்டார்வீணிலே - மையொன்று
கண்ணொருபாகங்கைக்கொண்டசெம்பவள
வண்ணுசிதம்பரதேவா. (உச)

என்றுனதுதில்லைநகரெல்லைதனிலெய்துவே
னென்றுனதுமுன்புநின்றேத்துவே - னென்றுனது
பொன்னுர்சபைகுறுகிப்போற்றுவேன்பூதியணி
மன்னுசிதம்பரதேவா. (உரு)

சந்ததமுநின்பாததாமரையைச்சிந்தித்துச்
சந்ததமும்பாடவரந்தாகண்டாய் - சந்ததமும்
பன்னுகமும்புலியும்பார்த்துநிற்கக்கூத்தாடு
மன்னுசிதம்பரதேவா. (உசு)

நாடியுனைப்புகழுநல்லோரையும்பொதுவி
லாடிமகிழுனையுமல்லாமற் - கூடி
யிணங்கேன்பிறரோடினியொருதெய்வத்தை
வணங்கேன்சிதம்பரதேவா. (உஎ)

செற்றம்பகையாசைதீராதநாயேன்றன்
குற்றம்பொறுத்தடிமைகொள்ளுவாய் - நித்தம்
பரிந்தேநினைவார்பவப்பிணிக்குவாய்த்த
மருந்தேசிதம்பரதேவா. (உஅ)

பற்றியபாவக்கடலுட்பாசமெனுஞ்சம்பானைச்
சுற்றியகாகம்போற்றேன்றினேன் - வெற்றியுற
முன்னுளவுணர்புரமூன்றுஞ்சிரித்தெரித்த
மன்னுசிதம்பரதேவா. (உகூ)

விரித்தசடாடவியும்வெண்ணீறுமெய்யுந்
தரித்தசிலம்புமிருதாளுஞ் - சிரித்த
திருவாய்முகிழ்மலருந்தீவினையேன்காண
வருவாய்சிதம்பரதேவா. (௩௦)

மேதியுடன்மீதுவீறுந்தறுவாயிற்
காதல்பெறுமடியேன்கண்காண - வோதுங்
குருவாயெனையாண்டகோலமேகொண்டு
வருவாய்சிதம்பரதேவா. (௩க)

துன்மதனுக்கின்பந்தொலையாக்கதிகொடுத்த
நன்மைதனைக்கண்டடியேனம்பினேன் - மன்மதனைக்
கண்ணுலெரிந்துவிழக்காய்ந்தருளுஞ்செம்பவள
வண்ணுசிதம்பரதேவா. (௩உ)

அன்றுமாலானார்க்கரிதாகிநீயுலகி
லின்றுமாலானார்க்கெளிதன்றோ - கொன்றைசேர்
பொன்னார்சடாமகுடப்புண்ணியாபொற்சபையின்
மன்னுசிதம்பரதேவா. (௩௩)

ஐயாவுனையடியேனையாவெனவழைத்தா
லையாவெனேநீயழைகண்டாய் - மெய்யாஞ்
சரதாவனவரததாண்டவாஞான
வரதாசிதம்பரதேவா. (௩௪)

செஞ்சடையிற்றிங்கள்சிறுகுழவிசிந்துகின்ற
வஞ்சுதலைப்பாம்பினைக்கண்டஞ்சாதே - கஞ்சமலர்த்
தாளாமலைபயந்தசங்கரிக்குவாய்த்தமண
வாளாசிதம்பரதேவா. (௩௫)

தனக்குவமையில்லாநின்றாளிணையைச்சேர்ந்தேன்
மனக்கவலைமாற்றினேன்வாழ்ந்தே - னெனக்குலகி
லுன்னலிரந்துகொள்ளவொன்றுமினிக்கண்டிலேன்
மன்னுசிதம்பரதேவா. (௩௬)

நேசமுடன்பல்காணினைந்துருகிநின்னுடைய
வாசமலர்த்தாளிணையைவாழ்த்தியே - பூசனையுஞ்
செய்வேனெனக்கருளைச்செய்யாதபோதுனையான்
வைவேன்சிதம்பரதேவா. (௩௭)

கறுத்தமுழுநீலக்கடுமிடறன்பிள்ளை
யறுத்தகறிதன்னைவிருப்பானே - வெறுத்தசிலைக்
கைவேள்வடிவழியக்காய்கண்ணனென்றுனையான்
வைவேன்சிதம்பரதேவா. (௩௮)

தேரத்தெளியத்தெரிந்துன்றிருவருளைச்
சாரத்தவசித்திதாகண்டாய் - மேருச்
சிலையாற்புரமெரித்தசேவகாவெள்ளி
மலையாசிதம்பரதேவா. (௩௯)

என்புதசைதோலிவையாலெடுத்தவுடல்
வன்புதருஞ்சுவையைமாற்றுவா - யன்ப
ரினத்தாய்பெரியோரினிதுறையுந்தில்லை
வனத்தாய்சிதம்பரதேவா. (சo)

வெள்ளையெருத்தின்மிசையேயுனைக்காண
வுள்ளியொருத்தியுருகுவா - டெள்ளி
யறிவாலறியுமரும்பொருளேசெங்கை
மறியாய்சிதம்பரதேவா. (சக)

வெள்ளிமலைமீதேவிளங்குஞ்செம்பொன்மலைமேற்
றுள்ளுமெருதேறிவந்துதோன்றுவா - யுள்ளமுறப்
பன்னுணினைந்துருகிப்பாடுவார்பங்கிலுறை
மன்னுசிதம்பரதேவா. (சஉ)

காவென்றுனையடைந்துகண்டுகொண்டநாயேனை
வாவென்றருகழைத்துவாழ்விப்பாய் - சேவொன்று
மின்னுடவளவுருவெள்ளிமலைமேலுறையு
மன்னுசிதம்பரதேவா: (சங)

உறையும்பதியேதுரைத்தருளவேண்டு
நிறையுந்தவத்தோர்நினைவோ - மறையின்
றலையோகனகசபைதானோகயிலை
மலையோசிதம்பரதேவா. (சச)

வீடுபுகுதவினையேற்குவெம்பிறவிக்
காடுகடக்கநெறிகாட்டுவாய் - தேடும்
விதியாலறிவரியவேணியாபாதி
மதியாசிதம்பரதேவா. (சரு)

கண்ணுடையருன்கோலங்காணுஞ்சிவஞானக் [ஞ்
கண்ணுடையர்தாமன்றோகாணுங்கான் - மண்ணுலகு
சேணுடரும்புகழுந்தில்லைக்கனகசபை
வாணுசிதம்பரதேவா. (சசா)

பெறுவானும்பேறும்பேரின்பவீடு
முறுவானுமுன்னையன்றியுண்டோ - மறவாம
லெந்நாளுஞ்சொல்வாரிதயந்தனிலுறையு
மன்னுசிதம்பரதேவா. (௪௭)

அறியுமறிவாமரும்பொருளாமுன்னை
யறியுமறிவேதறியேன் - மறையின்
முடிவாமுகுந்தனுக்குமுண்டகற்குமெட்டா
வடிவாஞ்சிதம்பரதேவா. (௪௮)

சும்மாடுகட்டிச்சுமந்துழலுவார்சிலரை
யிம்மாநிலத்தினிலேயெண்ணுங்கா - லம்மாநின்
பொன்னாரடிமுடியைப்போற்றாதபேரன்றோ
மன்னுசிதம்பரதேவா. (௪௯)

ஐந்துபுலனுமடையப்பொறிகலங்கி
முந்துவினைத்துயரமூடியே - சிந்தை
யறவேதளர்ந்தவத்தையாலுமுன்னை
மறவேன்சிதம்பரதேவா. (௫0)

ஆனபெருந்துறையிலாயிரக்கான்மண்டபத்தின்
ஞானமுனிவருடனண்ணியே - மோன
முறவேகருதியுனைப்புகழ்வேனென்று
மறவேன்சிதம்பரதேவா. (௫௧)

மாத்திரைப்போதாயினுநின் வாய்த்தமலர்ச் சேவடிக்
நேத்திரத்தைநெஞ்சினிறுத்தாமற்-சாத்திரத்தை[கே
யெல்லாமறிந்துபயனேதுமினிக்கண்டிலேன்
வல்லாய்சிதம்பரதேவா. (௫௨)

செப்பைபொத்தபூண்முலையார்சிங்கிதனிலேயகப்பட்
டிப்பிறப்பும்வீணாய்போகுதென்செய்வே-னெப்பிறப்பு
பெண்ணுணலியாகும்பெற்றியாசெம்பவள [ம்
வண்ணுசிதம்பரதேவா. (௫௩)

சேரின்பமாகவுனைச்சிந்தைசெயுமின்பம்போ
லோரின்பமுண்டோவுணருங்காற் - பேரின்பத்
தேனேயமுதேதிருவம்பலத்தாடு
வானேசிதம்பரதேவா. (௫௪)

மாதர்தமக்குருகுமாப்போலநின்னுடைய
பாதமலர்க்குருகேன்பாவியேன் - வேத
முடிவேயுரைக்கரியமோனவுபதேச
வடிவேசிதம்பரதேவா. (௫௫)

அஞ்செழுத்தைதயோதாமலன்பாயனுதினமு
நெஞ்சகத்திற்சற்றுநினையாமல் - வஞ்சமுற்ற
வின்னுவினைப்பிறவியெப்படிபோமிப்புவிமேல்
மன்னுசிதம்பரதேவா. (௫௬)

இந்தவுலகத்தெழுந்தருளியென்னுடைய
சிந்தைகுடிபுகுந்ததேசிகா - பந்த
மறவேகருணையளித்தாண்டவுன்னை
மறவேன்சிதம்பரதேவா. (௫௭)

துன்பநெறியைத்தொலைத்துச்சிவஞான
வின்பநெறிதந்திரட்சிப்பா - யன்ப
ரினத்தாய்பெரியோரினிதுறையுந்தில்லை
வனத்தாய்சிதம்பரதேவா. (௫௮)

வெத்தருடன்கூடும்வினையேனெழுபிறப்பை
முத்தருடன்கூட்டிமுனிகுவாய் - பத்தரிட
நேசாவிசும்பளவாய்நீளுங்கயிலாச
வாசாசிதம்பரதேவா. (௫௯)

சத்தவிதபாதாளந்தானுந்தரைவானு
மத்தனையுநின்மேனியானக்கா - ணித்தமிடப்
பொன்னார்சபையுனக்குப்போதுமோபொற்புலியூர்
மன்னுசிதம்பரதேவா. (௬0)

மோனமுறநின்பாதமுண்டகத்தே தூங்குமொரு
ஞானவரமென்றனக்குநல்குவாய் - வானமுகி
லேழும்பயில்பொழில்சூழின்பப்புலியூரில்
வாழுஞ்சிதம்பரதேவா. (௬௧)

ஒருத்தியுடன்சாலவுயர்ந்ததொருவெள்ளை [ய
யெருத்தின்மிசைவந்தெனைவாவென்பாய்-கருத்திசை
வுன்னுந்தவமுடையோருள்ளமேயாலயமா
மன்னுஞ்சிதம்பரதேவா. (௬௨)

அளிக்குமொருபல்கோடியண்டரண்டமெல்லா
மொளிக்குமொருமாத்திரையின்மீள-வளிக்குமொரு
சித்தாபுலியூர்ச்சிவகாமசுந்தரிவா
மத்தாசிதம்பரதேவா. (௬௩)

தழைத்ததிருப்பாற்கடலைச்சந்நிதிக்கேயுள்ளங்
குழைத்தமுனிபாலகன்பால்கொள்ள - வழைத்துதவு
மத்தாபுலியூரமர்ந்தருளுங்கொன்றைத்தா
மத்தாசிதம்பரதேவா. (௬௪)

பரித்தமகமேருவுடன்பாம்புசிலைநாணுத்
தரித்தநெடுமாலேசரமாச் - சிரித்தருளி
யொன்னார்புரமூன்றொருநொடியிலேயெரித்த
மன்னாசிதம்பரதேவா. (௬௫)

சற்குருவைப்போற்றமற்சற்குருவைச்சாற்றமற்
சற்குருவைச்சந்ததமுஞ்சாராமற் - சற்குருவை
நின்றறியாமனிள்பிறவிநீங்கிடுமோ
மன்றுசிதம்பரதேவா. (௬௬)

சங்கமத்தைநின்கோலந்தன்னைக்குருபாத
பங்கயத்தைநம்பாதபாவியேன் - பங்கிலுறை
வின்னாப்பிறவியொழித்தெப்படியீடேறுவேன்
மன்னாசிதம்பரதேவா. (௬௭)

எந்தவகையாலுலகிலீடேறுவேனடியேன்
பந்தமறநின்பாதம்பற்றியே - சிந்தையுற
நாட்டேன்பலகாலுநாமந்தனைத்துதிக்க
மாட்டேன்சிதம்பரதேவா. (௬அ)

குருபதத்தைநம்பிக்குறித்துருகுந்தொண்ட
ரிருபதத்தையான்பெறுவதெந்நா-ளொருபதத்தைத்
தூக்காநடம்புரியுஞ்சோதியேதூயமறை
வாக்காசிதம்பரதேவா. (௬௯)

தேடிப்பலகாலுஞ்சிந்தித்துனைப்புகழ்ந்து
பாடிப்பரவவரம்பாலிப்பாய் - நாடித்
தொழுவார்வினையைத்துணிக்குமொருவென்றி
மழுவாசிதம்பரதேவா. (எ0)

பன்றிவடிவாகிப்படியிடந்துமாலறியா
நன்றிபுனைதாளெனக்குநல்குவாய் - வென்றிபுனை
யானேறுவந்தேறுமத்தனேயண்டர்பெரு
மானேசிதம்பரதேவா. (எக)

அன்னைவயிற்றின்னமடையாமலம்புவிமே
லென்னையினிக்கண்பார்த்திரட்சிப்பாய்-பொன்னித [ழித்
தாமாசிவகாமித்தாயார்தமக்களித்த
வாமாசிதம்பரதேவா. (எஉ)

அண்டமுழுதுந்தூக்கியம்பரத்திலேமிதித்த
புண்டரிகச்சீர்பாதம்போற்றிலேன் - கொண்டபடி
செப்பாயுனதிரண்டுசேவடியிலேதிலனை
வைப்பாய்சிதம்பரதேவா. (எ௩)

அனவரதங்கண்டடியேனுதரித்துப்போற்றி
லனவரதமுன்னின்றருள்வா - யனவரதம்
பொன்னூர்சபைக்கேபுனிதநடம்புரியு
மன்னாசிதம்பரதேவா. (எ௪)

பொன்னனசேவடியைப்போற்றுமற்பாவியே
னென்னாளும்பாழுக்கிறைத்தேனே - மின்னும்
பாகாபிறப்பறுக்கும்பால்வெள்ளைநீறுபுனை
வாகாசிதம்பரதேவா. (எரு)

மறையவரைத்தேசிகரைமாதவத்தோர்தம்மைக்
குறையமதிப்பாரையினிக்கொள்ளே - னறையிதழித்
தாராய்திருநாமஞ்சாற்றுமடியாரிடத்து
வாராய்சிதம்பரதேவா. (எசு)

யானேர்பொருளாகவென்றும்பழவடிமை
யானேருடன்கூட்டியாண்டவா - வானேர்
பலராதரித்திறைஞ்சும்பங்கயப்பொற்பாத
மலராசிதம்பரதேவா. (எஎ)

விழியிரண்டுங்குஞ்சிவெளுத்துடலுங்கூனி
மொழிதளர்ந்துகோலூன்றுமுன்னம் - பழிதவிர்ந்து
நின்னமமுச்சரிக்கநேயந்தரவேண்டு
மன்னசிதம்பரதேவா. (எஅ)

சிந்தைகளிக்கத்தெரிசிக்கக்கண்ணிணைவாய்
வந்தவடிவைப்புகழ்ந்துவாழ்த்தவே - யென்றன்
கரந்தாமரைத்தாளைக்கற்பொடுபூசிக்க
வரந்தாசிதம்பரதேவா. (எகூ)

ஒன்றோடுங்கூடாதுனைக்கருத்திலேகூடி
நின்றுலொழிந்துவினைநீங்குமே - மன்று
பரதாசரதாபவானியிடப்பாகா
வரதாசிதம்பரதேவா. (அ0)

என்றும்பெருந்துறையிலேழையேன்கண்காண
நின்றஞ்சிவலோகநித்தனே - யென்றுந்
தரையானதுதழைக்கத்தானுயர்ந்தவெள்ளி
வரையாய்சிதம்பரதேவா. (அக)

திருப்பாதிருப்புலியூர்ச்சென்றடைந்துநின்னை
விருப்பாயடிவணங்கவேண்டுங் - கருப்புச்
சிலையான்றனையெரித்தசேவகாவெள்ளி
மலையாய்சிதம்பரதேவா. (அஉ)

ஒகைவந்தசோணகிரியோநமசிவாயகுரு
வாகிவந்துநாயேனையாண்டவா - பாகுவந்த
சொல்லாளுடனேயுந்தோன்றிக்கருணைசெய்ய
வல்லாய்சிதம்பரதேவா. (அங)

உனையடைந்துபாவியேனுகெட்டேனவர்
தனையடைந்துமாயத்தகுமோ - மனையடைந்து
முன்னாளறுபத்துமூவர்க்குமுன்னின்ற
மன்னுசிதம்பரதேவா. (அச)

வாவாசிதம்பரதேவாவாவெனவழைத்தால்
வாவாவெனவழைத்துவாழ்விப்பாய் - வாவா
குருவேயுருவேகுணங்குறிகளில்லா
வருவேசிதம்பரதேவா. (அரு)

உண்டுதுணையருணையோநமசிவாயகுரு
மண்டுமறலிபடைவந்தாலுங் - கண்டு
வெருவேனினியுலகில்வேறொருதெய்வத்தை
மருவேன்சிதம்பரதேவா. (அசு)

காமவெகுளிமயக்கங்கடமைவேரறுத்துன்
னாமவெழுத்தோதிநாடோறுஞ் - சேம
நிதியாமுனைக்காணநேயந்தாவேணி
மதியாசிதம்பரதேவா. (அஎ)

ஐந்தவித்துக்காமாதியற்றுன்னடியிணைக்கே
சிந்தைவைத்துவாழுந்திறமென்றோ - சுந்தரப்பொற்
றாளாமலைபயந்தசங்கரிக்குவாய்த்தமண
வாளாசிதம்பரதேவா. (அஅ)

என்னநெறிசென்றாலுமென்னநெறிநின்றாலு
மென்னமொழிபேசியிருந்தாலு - முன்னுடைய
தாளேநினேவேன்றரைமேலினிப்பிறந்து
மாளேன்சிதம்பரதேவா. (அகூ)

எடுத்தபிறப்பெல்லாமெனக்குவந்துதாய்மார்
கொடுத்தமுலேப்பாலனைத்துங்கூட்டி - லடுத்தவிறப்
பன்னுகணைத்துயின்மால்பாலாழியுஞ்சிறிதா
மன்னுசிதம்பரதேவா. (கூ0)

துய்யதிருநாமஞ்சொல்லித்தொழுதேத்தி
மையலுறுவேனேவாவென்று - செய்ய
திருவாய்மலர்ந்தருளித்தேவியுடன்சேவில்
வருவாய்சிதம்பரதேவா. (கூக)

பரிவாயுனேப்புகழ்ந்துபாடுவார்பங்கிற்
றிரிவோமெனவருளிச்செய்தாய் - குருவா
யெனேயாளருணகிரியெந்தாயமுத
மனேயாய்சிதம்பரதேவா. (கூஉ)

எந்தவடிவாயெனேவந்திரட்சிப்பா
யந்தவடிவையசையாமற் - சிந்தை
யிணங்குந்தவமேயெனக்களிப்பாய்வானோர்
வணங்குஞ்சிதம்பரதேவா. (கூங)

அருணகிரிக்குகையிலேந்தெழுத்தனுகிச்
சரணமலர்தந்தருளிச்சார்வாய் - கருணேபுரி
யெந்தாய்புவிமேலெனேயோர்பொருளாக
வந்தாய்சிதம்பரதேவா. (கூச)

நரம்புதிரந்தோலெலும்புநாறுதசைமூளே
யிரம்புவினேசுக்கிலத்தோடேழுங் - குரம்பையுறு
காயந்தனிலடைத்துக்கண்கலக்கஞ்செய்ததென்ன
மாயஞ்சிதம்பரதேவா. (கூரு)

துன்னிமித்தஞ்செய்யினுநின்றொண்டருக்குத் தொல்
னன்னிமித்தமாகுமோநாடுங்கால்-வன்னிமத்தம்[லுலகி
புன்னாகங்கொன்றைதும்பைபூளையெருக்குப்புனைந்த
மன்னாசிதம்பரதேவா. (கூசு)

சமையக்கவலைதனையொழித்துச்சிந்தை
யமைத்தவநெறிதந்தாள்வா - யிமையக்
கொடிவாணுதல்பாகங்கொண்டபரஞ்சோதி
வடிவாசிதம்பரதேவா. (கூஎ)

நற்றியுனைச்சிந்தையுறநாடுமடியாருளத்தின்
மற்றுமொருதெய்வமதிப்பரோ - நெற்றிதனிற்
கண்ணாதிருநீலகண்டாகனிபவள
வண்ணாசிதம்பரதேவா. (கூஅ)

பொன்றுந்தசையுடலம்போடுந்தறுவாயி
லன்றுன்பதந்தந்தருளுவா - யென்றுஞ்
சிரத்தாதிருப்புலியூர்த்தேசிகாவெற்றி
வரத்தாசிதம்பரதேவா. (கூகூ)

உரையிறந்தமெய்ஞ்ஞானவுண்மையாரன்றே
கரையிறந்தபேரின்பங்காண்பார் - புரையிறந்த
வேதாகமப்பொருளேமெய்தானொருபாதி
மாதாசிதம்பரதேவா. (க00)

சிதம்பரவெண்பா

முற்றிற்று.

புத்தகவிளம்பரம்.

விநாயகரகவல் - இரட்டைமணிமாலை, விநாயக கவசம் - சிவகவசம் - சத்திகவசம் - சரஸ்வதி தோத்திரம் - இலக்குமி தோத்திரம், வேழமுகம் - உலகநீதி, அருணகிரிநாதர் வகுப்புத் தொகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருமுருகாற்றுப் படை, வேல்விருத்தம் - மயில்விருத்தம், முருகரந்தாதி, கந்தா சஷ்டி கவசம், கந்தர் கலிவெண்பா, சுந்தரர் வேடுபறி - பஞ்ச ரத்னத் திருப்புகழ், திருத்தொண்டத் தொகை - போற்றிக்கலி வெண்பா, நமச்சிவாயமாலை, சரஸ்வதி யந்தாதி, வராகிமாலை, கபிலரகவல், இந்த 17 - புத்தகங்களும் ஒன்றாகக் கட்டியது. அணா - 8, தபாற்கூலி அணா - 1. (32 mo. Royal.)

அருணகிரி யந்தாதி, திருக்கருவைக் கலித்துறை யந்தாதி, ஷை பதிற்றுப்பத் தந்தாதி, ஷை வெண்பா வந்தாதி, மதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி, பந்தனந்தாதி பந்தன் சரித்திரத்துடன், பொன்வண்ணத் தந்தாதி, பழமலை யந்தாதி, அபிராமி யந்தாதி, சௌந்தரி யலகரி, காசிக் கலம்பகம், திருவருணைக் கலம்பகம், மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ், முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், ஆதிபுரி வடிவுடை யம்மை பிள்ளைத்தமிழ். இந்த 16 - புத்தகங்களும் ஒன்றாகக் கட்டியது ரூ - 1, தபாற்கூலி அணா - 2. (16 mo. Royal.)

பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு, உடற்கூற்று வண்ணம், அவர் சரிதத்துடன் அணா-௨, தபாற்செலவு அணா-௧.

திருப்புகழ் முதல் பாகம்	...	0	3	0	புத்தகம் ௧-க்கு தபாற்செலவு அணா-௧
ஷை ௨-ம் பாகம்	...	0	4	0	
ஷை ௩-ம் பாகம்	...	0	4	0	
ஷை ௪-ம் பாகம்	...	0	4	0	